டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 4.10.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 091 - Madurai | Online Edition

# தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, அக்.3

தமிழகத்தில் இன்று 17 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், லட்சதீவு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

அதன் காரணமாக, இன்று (அக்.4) தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி,




வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

அக்.5ம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, நீலகிரி, ஈரோடு, சேலம், கடலூர், மயிலாடு துறை, விழுப்புரம் மாவட்டங்கள், கோயம் புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

அக்.6ம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். இராமநாத புரம், சிவகங்கை, மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்கள், கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

அக்.7ல் தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கடலூர், அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், தேனி, ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

அக்.8ல் தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி, திருநெல் வேலி மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில், அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உணவு இழப்பு மற்றும் கழிவுகள் குறித்த விழிப்புணர்வு தினம்

கோயம்புத்தூர், அக்.3

வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உணவு பதன்செய் பொறியியல் துறையால் நிறுவப்பட்ட உணவுக் கழகத்தின் முன்னிலையில் சர்வதேச உணவு இழப்பு மற்றும் கழிவுகள் குறித்த விழிப்புணர்வு தினம் 29.9.24 அன்று நடைபெற்றது.




உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் காலநிலை மாற்றத்தைக் கணித்தல் போன்ற அழுத்தமான சவால்களைச் சமாளிக்க முதலீட்டின் அவசரத் தேவையைக் குறிக்கும் வகையில், உணவு இழப்பு மற்றும் கழிவுகளைக் குறைப்பதற்கான காலநிலை நிதி, என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். விழிப்புணர்வு பேரணி, வினாடி-வினா, சுவரொட்டி வழங்குதல், மீம் உருவாக்கம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டன. விழிப்புணர்வு பேரணியை துணைவேந்தர் முனைவர் ஏ.கீதாலட்சுமி, முனைவர் பு.ரவிராஜ், முதன்மையர் (வேளாண் பொறியியல்), முனைவர் சூ.மரகதம், முதன்மையர் (மாணவர் நலன்), முனைவர் ஆ.பாலகிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உணவுப் பதப்படுத்துதல் துறைத் தலைவர், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு உணவு இழப்பு மற்றும் கழிவுத் தடுப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். விழிப்புணர்வு பேரணியில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை உள்ளடக்கிய சுமார் 600 பேர் கலந்து கொண்டு, முழக்கங்களை எழுப்பினர். உணவு இழப்பு மற்றும் கழிவு களைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பது இப்பேரணியின் மையக் கருத்தாகும்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி



விழுப்புரம், அக்.3

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் வட்டாரம், பரசுரெட்டி பாளையம் கிராமத்தில் கரும்பு பயிர் சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு வேளாண்மை துறை அட்மா திட்டம் மூலம் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி வழங்கப் பட்டது.

பயிற்சியில் வட்டார தொழில்நுட்பம் மேலாளர் தேன்மொழி விவசாயிகளை வரவேற்றார். ராஜ ஸ்ரீ சர்க்கரை ஆலை முண்டியம்பாக்கம் விரிவாக்கத்துறை உதவி மேலாளர் தேவராஜ், சொட்டுநீர் மானிய மற்றும் அதன் பயன்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

ஞானசுந்தரம், கரும்பு கோட்ட அலுவலர், கரும்பில் புதிய நிர்ணய விலை மற்றும் புதிய கரும்பு நடவு செய்யும் விவசாயி களுக்கு ஏக்கருக்கு 8125 மானியமாக ஆளை வழங்கப்படுகிறது மற்றும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதன் மேலாண்மையும் விரிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் வேளாண் விற்பனை மற்றும் வணிகம் கலந்து கொண்டு மானிய திட்டங்கள் வேளாண் விளை பொருட்களை மதிப்பு கூட்டுதல் மற்றும் உலர் களம் அமைத்தல் பற்றி விரிவாக கூறினார். கரும்பு கோட்ட களப்பணியாளர்கள் மற்றும் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். பயிற்சிக் கான ஏற்பாடுகளை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் அருள்பாபு, வீரமணி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் பரிமளா நன்றி கூறினார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 03.10.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 28 | 32 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 28 | 32 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 48 | 57A | உருளை(ஊட்டி) | 50 | 56 |
| 2 | வெண்டை | 30 | 34 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 45 | 50 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 45 | 50 | 60 | கேரட் | 45 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 45 | 50 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 35 | 40 |
| 6 | புடலை | 22 | 26 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன்(L/G) | 26 | 30 | 63 | டர்னிப் | 35 | 40 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 16 | 20 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 26 | 30 | 66 | காளிபிளவர் | 54 | 58 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 28 | 32 | 69 | இஞ்சி | 50 | 130 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 34 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 45 | 50 | 71 | பென்னி பீன்ஸ் | 80 | 90 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பட்டறை) | 44 | 52 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 25 | 30 | 73 | ஊட்டி அவரை | 120 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 45 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 60 | 66 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 120 | 130 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 45 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 130 | 200 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 45 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 65 | 70 |
| 40 | கோவக்காய் | 25 | 28 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 16 | 20 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 36 | | | | |

# நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்



மதுரை, அக்.3

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில், சின்ன இலந்தைகுளம் கிராமத்தில் நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் 3.10.24ம் தேதி அன்று நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் சுமார் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் இரா.பாண்டி, மத்திய மாநில திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் தக்கைப்பூண்டு விதைகள் 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குதல், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம் நெல் நுண்ணூட்டம் வழங்குதல், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட் களை வழங்கும் போது டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, கூகுள்பே, போன் பே ஆகியவற்றினை பயன்படுத்தி தொகையினை செலுத்தி பொருட்கள் வாங்க வேண்டுமென எடுத்துக் கூறி அனைவரையும் வரவேற்றார்.

மதுரை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங் கிணைப்பாளர் டாக்டர் சுப்பிரமணியன், திருந்திய நெல் சாகுபடி முறைகளான நிலத்தேர்வு, 2 கிலோ குறைவான விதையளவு, உயிரியல் பூஞ்சாண நோய் கட்டுப்பாடு விதை நேர்த்தி, ஒரு செண்ட் நாற்றங்கால், 12-14 வயதுடைய இளநாற்றுகள் நடவு செய்தல், 22.5x22.5 செ.மீ இடைவெளி சதுர முறையில் ஒற்றை நாற்று நடவு, பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, கோனோ வீடர் மூலம் களை நிர்வாகம், இலைவண்ண அட்டை கொண்டு தழைச்சத்தை தேவைக்கேற்ப பிரித்து இடுதல், நீர் மறைய நீர்

கட்டுதல், நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் அதிகம் காணப்படுவதால் ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாக முறைகளான கார்பெண்டசிம் மற்றும் மேங்கோசெப் கலந்த சாப் (SAAF) பூஞ்சாண கொல்லி மருந்து ஏக்கருக்கு 250மி.லி தெளிக்கவும், இயற்கை முறைகளான பஞ்சகாவ்யம், வேப்பங் கொட்டை கரைசல் தெளிப்பு, மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனகவர்ச்சி பொறி பயன்படுத்துவதோடு இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா ரைசோபியம் ஆகியவற்றினை பயன்படுத்துமாறும் முக்கியமாக விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துமாறும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண் பொறியாளர் பரமன், வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் மானியத்திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.



மேலும் வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார், வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். பயிற்சியின் முடிவில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகள் குறித்த தொழில்நுட்ப கருத்துக்கள் அடங்கிய பயிற்சி கையேடு, மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் உளுந்து, சூடோமோனாஸ், திரவ உயிர் உரங்கள் அடங்கிய குறுவை தொகுப்பு கிட் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும் அருகில் உள்ள வேளாண் சூழலியல் பகுப்பாய்வு (AESA) திடல்களை வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மை அதிகாரிகள் இணைந்து பார்வையிட்டு விவசாயிகளுக்கு பூச்சி நோய் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப கருத்துக்களை எடுத்துரைத்தனர்.




விஞ்ஞானிகள் விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாமில் நெற்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பேரணி நடைபெற்றது.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் உதவி வேளாண்மை அலுவலர் ப.பால்பாண்டி நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் பா.வேல்முருகன், சௌந்தராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெறும் பயிற்சிகள் மற்றும் நிகழ்வுகள் – அக்டோபர் 2024

| வ.எண் | தலைப்பு | நாள் |
|---|---|---|
| 1. | பழங்களில் மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைபடுத்தல்<br>இடம் : கே.வி.கே விருத்தாசலம் | 08.10.24 |
| 2. | உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள்<br>இடம் : தி.அகரம் | 09.10.24 |
| 3. | சிறுதானியங்களில் ரகங்கள் மற்றும் பயிர் மேலாண்மை<br>இடம் : இளங்கியனூர் | 10.10.24 |
| 4. | காட்டு பன்றி மேலாண்மை<br>இடம் : ஆலிச்சிகுடி | 15.10.24 |
| 5. | வேளாண் சமூக காடுகள்<br>இடம் : கே.வி.கே விருத்தாசலம் | 16.10.24 |
| 6. | தீவன பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள்<br>இடம் : கோ மாவிடந்தால் | 17.10.24 |
| 7. | மணிலாவில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள்<br>இடம் : கொண்டசமுத்திரம் | 18.10.24 |
| 8. | விதைப்பு மற்றும் உரம் தெளிதலில் டிரோன்னின் பயன்பாடு<br>இடம் : சிறுபாக்கம் | 19.10.24 |
| 9. | உளுந்து பயிரில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள்<br>இடம் : வடமூர் | 21.10.24 |
| 10. | நுண்ணூட்ட சத்து நிறைந்த சத்து மாவு மற்றும் இதர தயாரிப்புகள்<br>இடம் : கத்தாழை | 22.10.24 |

| | | |
|---|---|---|
| 11. | சூரிய காந்தி ஓர் அறிமுகம்<br>இடம் : கோ மாவிடந்தால் | 24.10.24 |
| 12. | முந்திரி சாகுபடி மற்றும் பராமரிப்பு<br>இடம் : கே.வி.கே விருத்தாசலம் | 25.10.24 |
| 13. | நெல்லில் உயிர் உர மேலாண்மை | 28.10.24 |

இத்தகவலை திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

**முகக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக முகக் கவசம் அணிவோம்**



# பதியம் போடுதல் என்றால் என்ன? அதன் வகைகள் பற்றி தெரியுமா?

பொதுவாக தோட்டக்கலை பயிர்களில் தான் பதியம் அதிகமாக போடப்பட்டு, அதனை பிடுங்கி நடவு செய்யப்படு கிறது. செடியிலிருக்கும் தண்டுகளில் வேர்களை உருவாகச் செய்த பின்னர் வேர்களுடன் உள்ள அத்தண்டினைப் பிரித்தெடுத்து நடவு செய்வதே பதியம் போடுதலாகும். இது பெரும்பாலான மரங்கள் மற்றும் படர் செடிகளில் இம்முறையில் பயிர்கள் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றன.

குறிப்பாக கார்னேசன், சாமந்தி போன்ற செடிகளில் பதியம் போடுதல் மூலமாக பயிர் பெருக்கம் செய்யப்படுகின்றன. மேலும் கொய்யா, மாதுளை, எலுமிச்சை, மேற்கிந்திய செர்ரி, கறிப்பலா போன்ற மர பயிர்களிலும் பதியம் போடப்படுகிறது.

**பதியம் முறைகள் என்ன?**

**1) தரை பதியம் (GROUND LAYERING)**

இந்த முறையில் தரையோடு அல்லது தரைக்கு அருகில் காணப்படும் குச்சிகளை (தண்டுகளை) தேர்வு செய்து மண் பதியத்திற்கு பயன்படுத்தலாம்.

**அது எப்படி?**

பென்சில் அளவுள்ள குச்சிகளை, தேர்வு செய்து நுனியி லிருந்து, ஒரு அடி தள்ளி சிறு காயப்படுத்தி அந்த பகுதியை மண் நிரப்பி தொட்டியில் நன்கு உட்புகுமாறு செலுத்தி அதன் மேல் தேவையான அளவு மண் கலவை போட்டு, நீர் ஊற்றி ஈரப்படுத்தி பின்னர் ஊன்றப்பட்ட குச்சி மீது சிறிய கல்லை வெயிட்டிற்காக வைக்க வேண்டும். தொட்டியில் தொடர்ந்து நீர் ஊற்றிவர குச்சியில் வேர் பிடிக்க தொடங்கும். 20நாட்களுக்கு பின் தாய் செடியிலிருந்து தனியாக பிரித்து எடுக்க வேண்டும். பின்னர் இவற்றை எடுத்து பாலித்தின் பைகளில் நட்டு நன்றாக பராமரித்த பின்னர் நடவிற்கு பயன்படுத்தலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## 2) விண் பதியம் (AIR LAYERING)

இம்முறையில் மரச்செடிகளில் மேல் பகுதியில் காணப்படும் பென்சில் அளவுள்ள தண்டுகளை தேர்வு செய்து அவற்றின் தண்டு பட்டையை ஒரு செ.மீ நிளத்திற்கு வெட்டி எடுத்து விட வேண்டும். அதை சுற்றி ஈரப்படுத்திய தென்னை நார் கழிவு வுடன் மக்கிய மண்ணை சரிபங்காக கலந்து பட்டை நீக்கப்பட்ட தண்டுபகுதியில் வைத்து பாலீத்தின் தாள் கொண்டு கட்டி விட வேண்டும். காயம்பட்ட பகுதியில் இருந்து வேர்கள் 20 நாட்களில் தோன்றும்.

பின்னர் அவற்றை தாய் செடிகளிலிருந்து படிப்படியாக பிரித்து எடுக்க வேண்டும். பின்னர் நன்றாக பராமரித்த பின் நடவு வயலில் அந்த குச்சிகளை நடவுக்கு பயன்படுத்தலாம்.




இந்த இரண்டு முறைகளும் எளிதாக செய்யக்கூடிய முறையாகும். நன்றாக வளர்ந்து பலன் தரக்கூடிய செடிகளை தான் பதியம் போட பயன்படுத்த வேண்டும்.

பதியம் போட்டு பழக்கன்றுகள், பூச்செடிகள் உருவாகி விற்பனை செய்வது மூலமாக கூடுதலான வருமானம் பெறலாம்.

நாமும் பயன்பெற்று அடுத்தவர்களுக்கும் பயன்பெறும் வகையில் நடவு கன்றுகளை வழங்கிடலாமே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

கோயம்புத்தூர், அக்.3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில் நுட்ப மகத்துவ மையம் 1.06 லட்சம் சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது.




இம்மையத்தின் மூலம் பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங் களுக்கு இடையே புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவுசார் தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்வதற்கு வழிவகுக்கும். பொது/தனியார் கூட்டு முயற்சியின் மூலம் உயிரி தொழில்நுட்பவியல், உயிர் தகவலியல், மரபியல், மூலக்கூறு கண்டறிதல், மரபணு தனிமைப்படுத்தல், உயிரணு வளர்ப்பு மற்றும் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை மேம்படுத்த உதவும். இதன் தொடக்கமாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும்வேளாண் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 3.10.24 அன்று நடைபெற்றது.

உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் சார்பாக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில் தொடக்க நிறுவனங்களான M/s.அரிராங் பையோடெக் பிரைவேட் லிமிடெட், M/s.சக்தி பெர்டிலைசர்ஸ் கம்பெனி மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் அருண்குமார் மாதவன், திவ்ய பாலன் ஆகியோர்கள் இடையே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி முன்னிலையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டனர்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.க. கலாராணி, தாவர உயிரி தொழில்நுட்பத்துறை தலைவர் முனைவர் ஈ.கோகிலாதேவி, திட்ட இயக்குனர் மற்றும் பேராசிரியர் முனைவர் ச.மோகன்குமார், உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தொடக்க நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# திருச்சி மாவட்டம், சிறுகமணி, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெறும் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள்–அக்டோபர் 2024

| வ.எண் | நாள் | தலைப்பு |
|---|---|---|
| 1. | 01.10.24 | இயற்கை வேளாண்மை உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்களுக்கான ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி **இடம் : கே.வி.கே, சிறுகமணி** |
| 2. | 04.10.24 | களப்பயிற்சி – சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டுதல் தொழில்நுட்பங்கள் **இடம் : அயன்ரெட்டிப்பட்டி, வையம்பட்டி** |
| 3. | 05.10.24 | பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி – 18வது தவணை வெளியீடு இணையவழி ஒளிபரப்பு, நிலையப்பயிற்சி, திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பருவங்களுக்கு ஏற்ற காய்கறிகள் **இடம் : கே.வி.கே, சிறுகமணி** |
| 4. | 08.10.24 | களப்பயிற்சி – பசுந்தாள் உரமும் பம்பர் விளைச்சலும் **இடம் : புள்ளம்பாடி வட்டாரம்** |
| 5. | 14.10.24 | நிலையப்பயிற்சி – மாடித்தோட்டம், வீட்டுக் காய்கறி தோட்டம் **இடம் : கே.வி.கே, சிறுகமணி** |
| 6. | 16.10.24 | நிலையப்பயிற்சி – வாழையில் ஊட்டச்சத்து மேலாண்மை **இடம் : கே.வி.கே, சிறுகமணி** |
| 7. | 17.10.24 | நிலையப்பயிற்சி – இ–வாடகை மற்றும் பண்ணை இயந்திரங்களின் பயன்பாடு **இடம் : கே.வி.கே, சிறுகமணி** |
| 8. | 18.10.24 | நிலையப்பயிற்சி – உள்ளூர் ரகங்களும் உழவரின் காப்புரிமைகளும் **இடம் : கே.வி.கே, சிறுகமணி** |
| 9. | 22.10.24 | நிலையப்பயிற்சி – நெல்லில் நீர் மேலாண் தொழில்நுட்பங்கள் **இடம் : கே.வி.கே, சிறுகமணி** |
| 10. | 23.10.24 | நிலையப்பயிற்சி – வாழையில் மதிப்புக் கூட்டுதல் தொழில்நுட்பங்கள் **இடம் : கே.வி.கே, சிறுகமணி** |

விபரங்களுக்கு முனைவர் சி.ராஜாபாபு, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி, தொலைபேசி : 0431-2962854, 91717 17832 தொடர்பு கொள்ளலாம்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உழவர் பயிற்சி நிலையம் சார்பில் கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, அக்.3

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை (உழவர் பயிற்சி நிலையம்) விவசாயிக்கு கிராம அளவிலான விவசாயிகள் பயிற்சி 3.10.24 அன்று அதப்படிக்கி கிராமத்தில் பயிற்சி நடத்தப்பட்டது.

காளையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் பொ.இரத்தினகுமார், வேளாண்மைத் துறையில் செயல்படுத்தி கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்




பாடுகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி சாகுபடி பரப்பை அதிகப்படுத்துதல் மற்றும் வேளாண்மை சார்ந்த திட்டங்களான முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டம் ,வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டிரியா, திரவ பொட்டாஷ் இவைகளை பயன்படுத்தி அனைத்து பயிர்களுக்கும் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்தும் மற்றும் பிரதம மந்தரி கௌரவ நிதி திட்டம் மற்றும் விவசாயி கடன் அட்டை வழங்குதல் போன்ற திட்டங்களை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் உழவர் பயிற்சி நிலையம், சிவகங்கை வேளாண்மை அலுவலர் கா.வீரையா, இயற்கையான உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண் வளத்தைப் பெருக்கி இடுபொருளுக்கு ஆகும் செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம். மேலும் அனைத்து தாவரங்களுக்கும் தழைசத்து இன்றியமையாதது. நைட்ரஜன் எனப்படும் தழைசத்தில் இருந்து தான் தாவரங்களில் உள்ள புரதங்கள் தயாரிக்கப்படுகின்றன. எனவே தழை சத்தை பெறுவதற்கு நுண்ணுயிர் அடங்கிய உரங்களையோ அல்லது நுண்ணுயிரோடு இயைந்து வாழும் உயிரனங்களையோ உரமாக இட சாகுபடி செலவைக் குறைக்கலாம்.

மேலும் சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த தொழில் நுட்பங்களான அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல் பற்றியும் இயற்கையான முறையில் பயிர்களுக்கு எவ்வாறு உரமிடதல் பற்றியும் பசுந்தாள் உரங்கள் விதைமுதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்கள் பற்றியும் மற்றும் பசுந்தழை உரங்கள் வயலில் இடுவதால் இயற்கையான முறையில் பயிர் சாகுபடி செய்வதையும், இலை வண்ண அட்டையை பயன்படுத்தி உரம் இடுவதையும், உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், கரிம உரங்கள் மற்றும் மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் பூசாகேப்சூல், வேஸ்ட் டீ கம்போஸ்ட் தாயரிக்கும் முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் பேரூட்ட சத்துகள் மற்றும் நுண்ணூட்ட சத்துகள் இயற்கையான முறையில் இடுவதை பற்றியும் எடுத்து கூறினார். மேலும் பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் பயன்படுத்தும் முறை பற்றி அட்மா திட்டத்தில் செயல்படுத்தி வரும் செயல்விளக்கம் விவசாயிகளுக்கான உள் மற்றும் வெளிமாவட்ட மற்றும் மாநில அளவிலான பயிற்சிகள் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தி மண்ணின் வளத்தை பாதுகாக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் கூட்டத்தில் உதவி வேளாண்மை அலுவலர் செல்வம் நெல் பயிரில் வறட்சி காலங்களில் விதை முளைப்பு திறனை அதிகரிக்க (1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு) பயன் படுத்தி விதை கடினமாக்குதல் செயல்விளக்கம் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் காளீஸ்வரி செய்திருந்தார்.

# தளி வட்டாரத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழுக் கூட்டம்

கிருஷ்ணகிரி, அக்.3

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலத்தில் வட்டார தொழில்நுட்பக் குழு மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் வட்டார தொழில்நுட்பக் குழுவின் ஒருங்கிணைப் பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் சி.முருகன் குழுக் கூட்டத்திற்கு முன்னிலை வகித்தும், விவசாயிகள் ஆலோசனைக் குழு தலைவர் போ.கங்கப்பா குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்தும் வருகை புரிந்த விவசாயிகள் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் மற்றும் தர துறை அலுவலர்களை வரவேற்று குழுக் கூட்டத்தினை தொடங்கி வைத்தனர்.

குழுக்கூட்டத்தில் மண் வளத்தை பாதுகாக்க இயற்கை உரங்கள் இடுவது குறித்தும், மண்வளத்தை பாதுகாக்க தக்கைப் பூண்டு இடுவதன் அவசியம் குறித்தும் விளக்கினார். மேலும் மண் பரிசோதனையின் முக்கியத்துவம், மண்ணில் உள்ள பேரூட்ட சத்துகள் பயன்பாடுகள் குறித்தும், முதலமைச்சரின்



மண்ணுயிர் காத்துமண்ணுயிர் காப்போம் திட்டம் குறித்தும், பசுந்தாள் உர பயன்பாடு, இயற்கை வேளாண்மை ஊக்குவிக்கும் வகையில், மானியத் திட்டங்கள், உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்தும் விளக்கமளித்தார்.

மேலும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் பயன்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் கூறப்பட்டது. மேலும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் செயல்பாடுகள், திட்ட நோக்கம், திட்டத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு சென்றடையும் தொழில்நுட்பங்கள் குறித்தும், பயிற்சி, பட்டறிவு பயணம், செயல்விளக்கம் போன்ற திட்டப் பணிகள் குறித்தும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

வேளாண்மைத் துறையின் மூலம் மேற்கொள்ளும் மானியத் திட்டங்கள்,தோட்டக்கலைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள்,வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியத் திட்டங்கள்,உழவர்சந்தை,சேமிப்பு கிடங்கு குறித்தும் வருகை புரிந்த விவசாயிகள் ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இக்குழுக் கூட்டத்தில் சி.சுப்ரமணி,வேளாண்மைஅலுவலர் சிறுதானியங்களின் பயன்பாடுகள், இயற்கை உரங்களான பஞ்சகாவ்யா, இயற்கை பூச்சி விரட்டி, மீன் அமிலம், ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம், அமிர்த கரைசல் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு கூறினார்.

இக்குழுக் கூட்டத்தில் அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சிந்தனா அட்மா திட்ட பணிகள் முன்னேற்றம் மற்றும் விவரங்களையும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும், உழவன் செயலி செயல்பாடுகள், பயன்கள் குறித்தும் வருகை புரிந்த விவசாயிகள் ஆலோசனைக்குழு உறுப்பினர்களுக்கு விளக்கமளித்து நன்றி கூறினார்.

குழுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் செய்திருந்தார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்



சேலம், அக்.3

சேலம் மாவட்டம், அட்மா திட்டத்தின் கீழ் இரண்டு நாள் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.

வேளாண்மை இணை இயக்குனர் எஸ்.சிங்காரம் தலைமை தாங்கி வேளாண் தொழில்கள் மூலம் வருமானத்தை பெருக்கும் வழிகள் குறித்து எடுத்து கூறினார்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் பா.கண்ணன் அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் குறித்து எடுத்து கூறினார். சிறப்பு அழைப்பாளராக வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் ஆர்.தமிழவேந்தன் கலந்து கொண்டு புதிய இரகம், வளர்ச்சி ஊக்கிகள் பயன்பாடு மற்றும் வர்த்தக மேம்பாடு குறித்த எடுத்து கூறினார்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.ஜெகதாம்பாள் முன்னிலை வகித்து பருவத்திற்கு ஏற்ற ரகங்கள் மற்றும் பூச்சி நோய் தாக்குதல் குறித்தும் எடுத்து கூறினார். மண்ணியல் துறை பேராசிரியர் எஸ் சந்திரசேகரன், வேளாண் விரிவாக்க இணைப் பேராசிரியர் க.ஆனந்த், பயிர் பாதுகாப்பு இணைப்பேராசிரியர் மா.ரவி, சுற்றுசூழல் இணைப்பேராசிரியர் பெ.கலைச்செல்வி, வனவியல் உதவி பேராசிரியர் மா.கிருபா, கால்நடை உதவி பேராசிரியர் பெ.கோகிலா, தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் ஆர்.குமரவேல் மற்றும் மீ.பிரியா ஆகியோர் தங்கள் துறை சார்ந்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துறைத் தனர். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் R.ஸ்ரீ நிறைமதி நன்றி கூறினார்.

வீரபாண்டி, சேலம், பனமரத்துப்பட்டி, அயோத்தியாபட்டினம் மற்றும் மகுடஞ்சாவடி வட்டாரத்தை சார்ந்த 25 விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

பயிற்சி ஏற்பாடுகளை கணினி நிரவலர் எஸ்,பிரபு, கணக்காளர் எஸ்.சங்கர், வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் கே. ராஜேந்திரன், எ.சுமித்ரா மற்றும் எம்.சோபனா ஆகியோர் செய்திருந்தினர்.

